A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

## முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்

**மேல்முறையீட்டு மனு எண் 27 / 2023**

திருமதி K. மலர்கொடி,
39, பக்கிள்புரம், 2வது தெரு,
தூத்துக்குடி – 628 003.

………மேல்முறையீட்டாளர்
(Rep by திரு K. சுதாகர்)

எதிர்

1. செயற்பொறியாளர் /விநியோகம்/நகர்/தூத்துக்குடி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டயபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

2. உதவி செயற்பொறியாளர் /விநி/நகர்/தெற்கு/தூத்துக்குடி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டயபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

3. உதவி மின்பொறியாளர் /விநி/நகர்/தெற்கு/தூத்துக்குடி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
29, மாசிலாமணிபுரம் 3வது தெரு, தூத்துக்குடி – 628 001.

. . . எதிர்மனுதாரர்கள்

(திரு.B.ராம்குமார், செயற்பொறியாளர் /விநியோகம்/நகர்/தூத்துக்குடி
திரு P. உமையொருபாகம், உதவி செயற்பொறியாளர் /விநி/நகர்/தெற்கு/தூத்துக்குடி
திரு R. பெருமாள், உதவி மின்பொறியாளர் /விநி/நகர்/தெற்கு/தூத்துக்குடி)

**மனு பெறப்பட்ட நாள்: 10-04-2023**

**கேட்புரை நாள்: 15-06-2023**

**ஆணை நாள்: 21-06-2023**

10.04.2023 அன்று பெறப்பட்ட திருமதி K. மலர்கொடி, 39, பக்கிள்புரம், 2வது தெரு, தூத்துக்குடி – 628 003 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண்

27/2023ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 14.06.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மின் இணைப்பு எண்.342-009-184-ஐ தனது பெயருக்கு பெயர் மாற்றம் வேண்டியும், தனக்கு ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக ரூ.10,000/- இழப்பீடுவேண்டியும் மற்றும் பெயர் மாற்றம் உரிய காலத்தில் செய்யப்படாததால் அதற்கான இழப்பீட்டு தொகையும் வழங்குமாறும்மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது கணவர் பெயரில் உள்ள மின் இணைப்பை தன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யுமாறு இணைதளம் மூலம் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தை ஆய்வு செய்ததில் மேல்முறையீட்டாளர் பெயரில் எவ்வித வருவாய் ஆவணங்களும் சமர்ப்பிக்காத காரணத்தால் கூடுதல் ஆவணமாக மேல்முறையீட்டாளர் பெயரில் ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு இணையதள வாயிலாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை22.01.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் 15.03.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில்

அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 15.03.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *மனுதாரரின் மனுவை இம்மன்றம் 27/2/2023 ல் கூடி மனுதாரர் தரப்பு கோரிக்கைகளையும், வாரியதரப்பு பதில்களையும் ஆய்வு செய்ததில் மனுதாரர் திருமதி.மலர்கொடி, 39 பக்கிள்புரம் 2வது தெரு, தூத்துக்குடி அவர்களின் கோரிக்கைக்கு மனுதாரர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி 5(7) ன் படி மற்ற வாரிசுதாரர்களின் நிலை குறித்து உறுதிமொழி (Sworn-in affidavit) பத்திரத்தில் தெரிவிக்கும் பட்சத்தில், பெயர் மாற்றம் செய்ய ஏதுவாகும் என இம்மன்றம் உத்தரவிட்டு இம்மனுவை முடித்து வைக்கிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 15.06.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு K. சுதாகர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு.B.ராம்குமார், செயற்பொறியாளர்/விநியோகம்/நகர் /தூத்துக்குடி, திரு P. உமையொருபாகம், உதவி செயற்பொறியாளர் /விநி/நகர்/தெற்கு/ தூத்துக்குடி & திரு R. பெருமாள், உதவி மின்பொறியாளர் /விநி/நகர்/தெற்கு/ தூத்துக்குடி, தூத்துக்குடிமின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர்

மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் தனது வீட்டின் மின் இணைப்பிற்கு பெயர் மாற்றம் செய்ய இணைய வழியாக 21/12/2022 தேதி அன்று விண்ணப்பித்திருந்ததாகவும், பெயர் மாற்றத்திற்கான காரணத்தில் due to death என்று தேர்வு செய்திருந்ததாகவும், TANGEDCO இணையதளத்தில் பெயர் மாற்றம் செய்ய (due to death) தேர்விற்கு கேட்கப்பட்ட ஆவணங்கள் Form 3, Form 4, Recent property Tax மற்றும் பெயர் மாற்றம் செய்ய கட்டணம் ஆகிய அனைத்தையும் தான் பதிவுவேற்றம் செய்து மேலும் தனது கணவரின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று நகல்களை property tax உடன் இணைத்தும் விண்ணப்பம் செய்ததாக தெரிவித்துள்ளார்.

5.2 உதவி பொறியாளர்/விநியோகம்/நகர்/தெற்கு/தூத்துக்குடி அவர்கள் 10 தினங்கள் கழித்து தனது விண்ணப்பத்தை நிலுவையில் (hold) இல் வைத்துள்ளதாகவும், (Additional document required) என்கிற பதில் மின் அஞ்சல் மூலம் தனக்கு கிடைத்ததாகவும், அன்றைய தினமே, கூடுதல் ஆவணமாக தனது வீட்டின் sale deed ஆவணத்தை பதிவேற்றம் செய்து மறு சமர்பணம் செய்ததாகவும், அடுத்த தினமே தங்களின் விண்ணப்பம் நிலுவையில் உள்ளது – Additional document required என்று தான் மீண்டும் மீண்டும் விண்ணப்பிக்க அவர் மீண்டும் மீண்டும் Hold இல் வைத்ததாகவும், எந்த ஆவணம் கூடுதலாக வேண்டும் என்று தெரிவிக்கவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அதன்பின் TANGEDCO WEBSITE இல் Grievance இல் புகார் செய்து, தன்னுடைய விண்ணப்பத்தை நிலுவையில் வைப்பதற்கான காரணத்தை கேட்டும், எந்த ஆவணம் கூடுதலாக வேண்டும் என்றும் தெரிவிக்ககோரி அதற்கு உதவி பொறியாளர் அவர்கள், பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பிப்பவர் பெயரில் Revenue document வேண்டும் என்று பதில்

தெரிவித்ததாகவும், தான் மேற்கொண்டு மின்னியலில் புகார் தெரிவித்ததாகவும், அந்த புகாருக்காக தொடர்பு கொண்ட உதவி பொறியாளர் Revenue document தங்கள் பெயரில் சமர்பித்தால் பெயர் மாற்றம் செய்து தருவதாக கூறியதாகவும், தான் அவரிடம் due to death காரணத்திற்காக தான் பெயர் மாற்றம் செய்வதாகவும், Revenue document அனைத்தும் தனது கணவர் பெயரில் உள்ளதாகவும், ஆகவே இணைய தளத்தில் கேட்டுள்ளபடி Form3, Form4, Death certificate, Legal heir certificate அனைத்தும் சமர்பித்துவிட்டதாக உதவி பொறியாளரிடம் தெரிவித்ததாகவும், அதற்கு அவர் Revenue document இன்றி பெயர் மாற்றம் செய்ய முடியாது என்று கூறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அதன்பின் இணையத்தில் Tamil Nadu Electricity Regulatory Commission's Codes and Regulations, Sec(7) Name Transfer charge படித்து பார்த்ததில் Revenue document பெயர் மாற்றம் விண்ணப்பிக்க கேட்கப்படவே இல்லை எனவும், ஆகவே தான் மின் அஞ்சலில் TANGEDCO Chairman, Executive Engineer, Superintending Engineer– Thoothukudi Urban அவர்களிடம் உதவி பொறியாளர் அவர்கள் கூறிய பொய்யான தகவலை தெரிவித்ததாகவும், அதற்கு அடுத்த நாள் உதவி பொறியாளர் அவர்கள் அவருடைய அலுவலக கடிதத்தை தனக்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பியதாகவும், அதிலும் அவர் தவறான தகவலாக பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பம் செய்பவர் பெயரில் Revenue document வேண்டும் என்று கூறியதாகவும், தான் அதையும் பொய்யான தகவலை தருகிறார் என்று மேலும் புகார் தெரிவித்ததாகவும், மேலும் செயற்பொறியாளர் அவர்களை நேரில் சென்று பார்த்தும், உதவி பொறியாளர் பொய்யான தகவலை வழங்கி வருகிறார் என்ற தகவலை கூறி பெயர் மாற்றம் செய்துதர உத்திரவிடுமாறும், TANGEDCO Regulatory Commisison's Code Name Transfer Book – யையும் அவரிடம் காண்பித்து தான் தனது கணவர் இறப்பிற்காக பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்து உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 தான் வாரிசு சான்றிதழ் சமர்பித்ததாகவும், மேலும் உறுதிமொழி பத்திரம் வேண்டும் என்றால் கூடுதலாக சமர்ப்பிப்பதாகவும், அதன்படி அவர் தன்னை அலைபேசியில் தொடர்புகொண்டு, Sworn In Affidavit சமர்பிக்கும் பட்சத்தில் பெயர் மாற்றம் செய்வதாக தெரிவித்ததாகவும், மேலும் அவர் உறுதிமொழி பத்திரத்தில் பெயர்மாற்றம் எனது பெயரில் செய்யும்பட்சத்தில் மற்ற வாரிசுதாரர்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை

என்பதையும், அது சம்பந்தமாக ஏதேனும் பிரச்சனைகள் வந்தால் அதற்கு தானே பொறுப்பு என்றும் உறுதிமொழி பத்திரத்தில் தெரிவிக்க கோரியும் Notary Public அங்கீகாரம் பெற்று சமர்பிக்குமாறு எதிர்மனுதாரர் தெரிவித்ததாகவும், தான் அவ்வாறே சமர்பித்தும் தற்போதுவரை தனது விண்ணப்பத்தை நிறைவேற்றி பெயர் மாற்றம் செய்யாமல் இன்னும் நிலுவையில் வைத்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தான் அனைத்தையும் சரியாக சமர்பித்தும் வேண்டும் என்றே தனது விண்ணபத்தை நிறைவேற்றாமல் நிலுவையில் வைத்துள்ளதாகவும், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் இறுதி ஆணையில் புகார்மனு தொடர்பான விசாரணை 27/2/2023 என்று மாலை 4 மணிக்கு நடந்தது என்றும் மனுதாரர் தரப்பில் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றும் கூறியுள்ளதாகவும், மன்றத்தின் விசாரணை தேதி குறித்து தனக்கு எந்த தகவலும் தெவிவிக்கப்படவில்லை எனவும், அவ்வாறு இருக்கும்போது தான் எவ்வாறு கலந்துகொள்ள இயலும் எனவும், தனக்கு தனது புகார் மனு பெறப்பட்டதற்கான ஒப்புதல் கடிதம், மேற்பார்வை பொறியாளர் அவர்களிடம் இருந்து கிடைத்ததாகவும், அதில் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் நடைபெறும் நாள் பற்றிய விபரம் பின்னர் தங்களுக்கு தெரிவிக்கப்படும் என்று மேற்பார்வை பொறியாளர் அவர்கள் தெரிவித்ததாகவும், ஆனால் அதன்படி தனக்கு தகவல் எதுவும் அளிக்கவில்லை எனவும், மேலும் online இல் தனது புகார் மனு பற்றிய நிலையை பார்க்கும் போது Hearing posted என்று தான் இருந்தது தவிர மன்ற விசாரணை நடைபெறும் நாள் தெரிவிக்கப்படவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேலும் அவர்களுடைய ஆணையில் தனது உறுதிமொழி வாக்கு மூலத்தில் தனது மற்ற வாரிசுகளின் நிலை குறித்து தெரிவிக்கவில்லை என்று மிக பெரிய பொய்யான தகவலை வழங்கி உள்ளதாகவும், தனது உறுதிமொழி ஆவண நகலை இணைத்து மேல்முறையீடு மனுவுடன். அதில் மற்ற வாரிசுதாரர்களின் நிலை குறித்து அவர்களுக்கு தனது பெயரில் மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்வதில் எந்த ஆட்சேபணையும் இல்லை என்று அவர்களின் நிலையை காண்பித்தும் ஆணையத்தில் பதிலில் தான் தெரிவிக்கவில்லை என்ற பொய்யான தகவலை கூறியுள்ளதாகவும், மேலும் செயற்பொறியாளர் அவர்கள் கூறியவாறு தான் மேல்முறையீட்டாளர்

உறுதிமொழி பத்திரம் சமர்பித்துள்ளதாகவும், அவர் தன்னிடம் பேசிய Audio call recording மற்றும் உதவி பொறியாளர் கூறிய பொய்யான தகவல்கள் குறித்த சாட்சி ஆவணமும் (Audio Call Recorded proof) தன்னிடம் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 ஆகவே மேற்குறிப்பிட்ட காரணத்திற்காக தனது மனுவிக்கு பெயர் மாற்றம் செய்ய உத்தரவிட கோரியும், தனக்கு மிகுந்த மன உளைச்சல், நேரம் விரையம் பண செலவு ஆகியவைகளை ஏற்படுத்தி உள்ள உதவி பொறியாளர் செயற்பொறியாளர், மேற்பார்வை பொறியாளர் இவர்களிடம் இருந்து ரூ.10,000/- இழப்பீடு பெற்று தர கோரியும் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் பெயர் மாற்றம் செய்யாமல் இருந்தால் அளிக்கப்படும் இழப்பீட்டு தொகையையும் அளிக்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 தூத்துக்குடி விநியோகம் நகர், தெற்கு பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட மின் இணைப்பு எண். 342-009-184 வீதப்பட்டி IA திரு.கொடி சேகர் என்ற பெயரில் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதாகவும், தற்போது திருமதி.மலர்கொடி அவர்கள் மின் இணைப்பு எண். 342-009-184 ல் திரு.கொடி சேகர் பெயரிலிருந்து, தன்னுடைய பெயருக்கு பெயர் மாற்றம் கோரி திரு.கொடி சேகர் என்ற பெயரில் வீட்டுத் தீர்வை இரசீது மற்றும் Form 3, Form 4 ஆவணங்களை இணையதள வழியாக பதிவேற்றம் செய்து பதிவுக்கட்டணம் செலுத்தியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்குறிப்பிட்ட பெயர் மாற்றம் கோரிய விண்ணப்பத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்ததில், திருமதி. மலர்கொடி பெயரில் எவ்வித வருவாய் ஆவணங்களும், சமர்ப்பிக்காத காரணத்தால் கூடுதல் ஆவணமாக திருமதி. மலர்கொடி பெயரில் வருவாய் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டி, இணையதள வழியாக கேட்டுக்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் மின்நுகர்வோர் மின்னகத்தில் பெயர்மாற்றம் தொடர்பாக புகார் சமர்ப்பித்துள்ளதாகவும், ஆகையால் மின் நுகர்வோர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி எண்.5(7) ன்படி நுகர்வோர் சமர்ப்பிக்க வேண்டி

ஆவணங்கள் குறித்துகடிதம் மூலம் மின் நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 அதன் தொடர்ச்சியாக மனுதாரர் திரு.கொடி சேகர் அவர்களின் இறப்புச் சான்றிதழ் மற்றும் அவர்களின் வாரிசுச் சான்றிதழ் இணையதள வழியாக பதிவேற்றம் செய்ததாகவும், மேற்கண்ட வாரிசுச் சான்றிதழ் ஆவணத்தினை ஆய்வு செய்ததில் திரு.கொடி சேகர் அவர்களுக்கு மலர்க்கொடி மற்றும் 3 வாரிசுதாரர்கள் உள்ளனர் என்பது தெரிய வந்தது, எனவே, மனுதாரரிடம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கள் விதி எண்.5(7)i(b) யின் படி மற்ற வாரிசுதாரர்களிடம் தடையில்லாச் சான்று பெற்று, சமர்பிக்கும் பட்சத்தில் மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது மேல் நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்ற விபரம் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் மனுதாரர் திருமதி.மலர்கொடி அவர்கள் Sworn–in affidavit சமர்ப்பித்து மேற்படி Sworn in affidavit ல் திருமதி.மலர்கொடி அவர்கள் மற்ற வாரிசுதாரர்களின் நிலை குறித்த விபரம் தெரிவிக்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் மனுதாரர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி 5(7) ன் படி மற்ற வாரிசுதாரர்களின் நிலை குறித்து affidavit ல் தெரிவிக்கும் பட்சத்தில், பெயர் மாற்றம் செய்ய ஏதுவாகும் என்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள் குறித்து சட்டக் கருத்துரை வேண்டி கடிதம் மூலம் திரு.ஐ. பாலன், அரசு தரப்பு வழக்கறிஞர் தூத்துக்குடி அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், சட்டக்கருத்துரையில் திருமதி.மலர்கொடி வழங்கும் sworn in affidavit ல் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி எண் 5(7)(i)(b) ன் படி வாரிசு விபர நிலைகள் கூறப்பட வேண்டும் என்றும், விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்களில் இதர வாரிசுதாரர்களின் விபர நிலைகள் குறிப்பிடவில்லை என்றும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி எண்.5(7)I (b) படியான தகுந்த சங்கதிகள் அடங்கிய sworn in affidavit பெற்று கொண்டு மின் இணைப்பு எண்.342–009–178 ற்கு பெயர் மாற்றம் செய்து கொடுக்கலாம் என்று தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 ஆதலால் உதவி பொறியாளர்/தூத்துக்குடி மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மேல்முறையீட்டு மனு மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி எண் 5(7)i(b) படியான தகுந்த சங்கதிகள் அடங்கிய sworn in affidavit வழங்கும் பட்சத்தில் பெயர் மாற்றம் செய்ய ஏதுவாகும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இந்த முறையீட்டு மனுவில் திருமதி K. மலர்கொடி காலஞ்சென்ற கணவர் கொடிசேகர் என்பவரின் பெயரில் உள்ள மின் இணைப்பு எண் 342–009–184 வீதப்படி 1A லிருந்து அவருடைய நான்கு வாரிசுதாரர் உள்ள நிலையில் (திருமதி மலர்கொடி– மனைவி, திரு சங்கர்–மகன், ஷோபா–மகள் மற்றும் சுதாகர்–மகன்) மற்ற வாரிசுதாரர்களிடமிருந்து பெயர் மாற்றம் செய்ய ஆட்சேபனை இல்லை என்று உறுதி படிவம் இணைக்காமல் தனது பெயரில் மாற்ற கோரியுள்ளார்.

7.2 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.3 இம்முறையீட்டு மனுவில் கீழ்கண்ட வினாக்கள் எழுகின்றன.

1. மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்சார வழங்கல் விதியில் கூறப்பட்ட விதிகள் என்ன?
2. மேற்கண்ட விதிகளின்படி மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளாரா ?

**8.0 <u>வழக்கெழு வினா 1–ற்கான தீர்வு</u>:**

8.1 பெயர் மாற்றம் செய்யும்பொழுது உரிமதாரர் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து அறிய தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பில் கூறப்பட்டுள்ள விதி 5(7) ஐ ஆராய வேண்டும். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மின்னிணைப்பின் பெயர் மாற்றமானது வாரிசுதாரர் என்ற அடிப்படையில் கோரப்பட்டுள்ளதால் அதுசம்பந்தமாக அறிய மின்வழங்கல் விதித்தொகுப்பில் கூறப்பட்டுள்ள விதி 5(7)(i) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*<u>"5. Miscellaneous charges -</u>*
*xxx xxx xxx*
*<u>(7) Name Transfer charge</u>*

*(i) Every application for transfer of name consequent to the death of the consumer shall be in Form (1) in Appendix to this code accompanied by :*

*(a) Legal heirship certificate from the Tahsildar concerned or proof of ownership such as local body tax receipts (latest).*

*(b) No objection certificate from other legal heirs, if any, (or) an indemnity bond in Form (3) in Appendix to this Code on non-judicial stamp paper for a value of Rs.80/- and a sworn-in affidavit and authenticated by a Notary Public or by a gazetted officer to show the status of other legal heirs.*

*(c) Fresh application with fee to be specified by the Commission and agreement form.*

*Explanation: The name transfer is effected only for such services which are not under disconnection."*

8.2 மின்வழங்கல் விதித்தொகுப்பில் கூறப்பட்டுள்ள விதி 5(7)(i)ன்படி நுகர்வோர் இறந்த காரணத்திற்காகத் தரப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் இந்த விதித் தொகுப்பின் பிற சேர்க்கையில் படிவம் (1)இல் கொடுக்கப்பட்டுள்ளவாறு பின்வருவனவற்றை உடனிணைத்துதரப்பட வேண்டும்.

(a) உரிய வட்டாட்சியரிடமிருந்தான வாரிசுச் சான்றிதழ் அல்லது உள்ளாட்சி அமைப்பின் வரிகட்டிய பற்றுச்சீட்டு போன்ற உரிமையை நிலைநாட்டும் சான்று மெய்ப்பு (Proof)

(b) சட்டப்படியான வாரிசுகளின் மறுப்பின்மைச் சான்றிதழ் அப்படி யாராவது இருந்தால் அல்லது ரூ.80 மதிப்புடைய நீதித்துறை சாரா (Nonjudicial) முத்திரைத்தாளில் இவ்விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (3) இலான காப்புறுதிப்பத்திரத்துடன் செல்வாக்குள்ள பொது மனித (Notary Public) –ன் அல்லது அரசிதழ் பதிவுற்ற அலுவலரின் அதிகாரச் சான்றின் பேரிலான சூளேற்பு உறுதிமொழிப் பத்திரம் (Affidavit).

(c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும் சம்மதிப்புப்படிவமும்,

8.3 மேலும் துண்டிப்பில் இல்லாத மின்னிணைப்புகளுக்கு மட்டுமே பெயர் மாற்றம் செய்யப்படவேண்டும் எனவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட

விதிமுறைகளின்படி தகுந்த ஆவணங்கள் அளிக்கும் நேர்வில் பெயர் மாற்ற செய்யலாம் என தீர்வு செய்யப்படுகிறது.

9.0 **வழக்கெழு வினா 2–ற்கான தீர்வு:**

9.1 மேல்முறையீட்டாளர் தனது வீட்டின் மின் இணைப்பிற்கு பெயர் மாற்றம் செய்ய இணைய வழியாக 21/12/2022 தேதி அன்று விண்ணப்பித்திருந்ததாகவும், பெயர் மாற்றத்திற்கான காரணத்தில் due to death என்று தேர்வு செய்திருந்ததாகவும், TANGEDCO இணையதளத்தில் பெயர் மாற்றம் செய்ய (due to death) தேர்விற்கு கேட்கப்பட்ட ஆவணங்கள் Form 3, Form 4, Recent property Tax மற்றும் பெயர் மாற்றம் செய்ய கட்டணம் ஆகிய அனைத்தையும் தான் பதிவுவேற்றம் செய்து மேலும் தனது கணவரின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று நகல்களை property tax உடன் இணைத்தும் விண்ணப்பம் செய்ததாக தெரிவித்துள்ளார்.

9.2 உதவி பொறியாளர்/விநியோகம்/நகர்/தெற்கு/தூத்துக்குடி அவர்கள் 10 தினங்கள் கழித்து தனது விண்ணப்பத்தை நிலுவையில் (hold) இல் வைத்துள்ளதாகவும், (Additional document required) என்கிற பதில் மின் அஞ்சல் மூலம் தனக்கு கிடைத்ததாகவும், மேலும் அடுத்த தினமே தங்களின் விண்ணப்பம் நிலுவையில் உள்ளது – Additional document required என்று தான் மீண்டும் மீண்டும் விண்ணப்பிக்க அவர் மீண்டும் மீண்டும் Hold இல் வைத்ததாகவும், எந்த ஆவணம் கூடுதலாக வேண்டும் என்று தெரிவிக்கவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.3 வாரிய இணையதளத்தில் புகார் செய்த பின்பு உதவி பொறியாளர் பெயர் மாற்றம் செய்ய Revenue document வேண்டும் என்று தெரிவித்ததாகவும், ஆனால் Revenue document அனைத்தும் தனது கணவர் பெயரில் இருந்ததால் இணைய தளத்தில் கேட்டுள்ளபடி Form–3, Form–4, Death certificate, Legal heir certificate அனைத்தும் சமர்பித்துவிட்டதாக உதவி பொறியாளரிடம் தெரிவித்ததாகவும், அதற்கு அவர் Revenue document இன்றி பெயர் மாற்றம் செய்ய முடியாது என்று கூறிவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.4 மேலும் மேல்முறையீட்டாளர், செயற்பொறியாளர் அவர்களை நேரில் சென்று பார்த்தும், உதவி பொறியாளர் பொய்யான தகவலை வழங்கி வருகிறார் என்ற தகவலை

கூறி பெயர் மாற்றம் செய்துதர உத்திரவிடுமாறும், TANGEDCO Regulatory Commisison's Code Name Transfer Book – யையும் அவரிடம் காண்பித்து தான் தனது கணவர் இறப்பிற்காக பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்து உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். ஆகவே மேற்குறிப்பிட்ட காரணத்திற்காக தனது மனுவிற்கு பெயர் மாற்றம் செய்ய உத்தரவிட கோரியும், தனக்கு மிகுந்த மன உளைச்சல், நேரம் விரையம் பண செலவு ஆகியவைகளை ஏற்படுத்தி உள்ள உதவி பொறியாளர் செயற்பொறியாளர், மேற்பார்வை பொறியாளர் இவர்களிடம் இருந்து ரூ.10,000/– இழப்பீடு பெற்று தர கோரியும் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் பெயர் மாற்றம் செய்யாமல் இருந்தால் அளிக்கப்படும் இழப்பீட்டு தொகையையும் அளிக்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

9.5 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதுரையில் தூத்துக்குடி விநியோகம் நகர், தெற்கு பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட மின் இணைப்பு எண். 342–009–184 வீதப்பட்டி IA திரு.கொடி சேகர் என்ற பெயரில் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதாகவும், தற்போது திருமதி.மலர்கொடி அவர்கள் மின் இணைப்பு எண். 342–009–184 ல் திரு.கொடி சேகர் பெயரிலிருந்து, தன்னுடைய பெயருக்கு பெயர் மாற்றம் கோரி திரு.கொடி சேகர் என்ற பெயரில் வீட்டுத் தீர்வை இரசீது மற்றும் Form 3, Form 4 ஆவணங்களை இணையதள வழியாக பதிவேற்றம் செய்து பதிவுக்கட்டணம் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

9.6 மேற்குறிப்பிட்ட பெயர்மாற்றம் கோரிய விண்ணபத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்ததில், திருமதி. மலர்கொடி பெயரில் எவ்வித வருவாய் ஆவணங்களும், சமர்ப்பிக்காத காரணத்தால் கூடுதல் ஆவணமாக திருமதி. மலர்கொடி பெயரில் வருவாய் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டி, இணையதள வழியாக கேட்டுக்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.7 அதன் தொடர்ச்சியாக மனுதாரர் திரு.கொடி சேகர் அவர்களின் இறப்புச் சான்றிதழ் மற்றும் அவர்களின் வாரிசுச் சான்றிதழ் இணையதள வழியாக பதிவேற்றம் செய்ததாகவும், மேற்கண்ட வாரிசுச் சான்றிதழ் ஆவணத்தினை ஆய்வு செய்ததில் திரு.கொடி சேகர் அவர்களுக்கு மலர்க்கொடி மற்றும் 3 வாரிசுதாரர்கள் உள்ளனர் என்பது தெரிய வந்தது, எனவே, மனுதாரரிடம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கள் விதி எண்.5(7)i(b) யின் படி மற்ற வாரிசுதாரர்களிடம்

தடையில்லாச் சான்று பெற்று, சமர்பிக்கும் பட்சத்தில் மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது மேல் நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்ற விபரம் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் மனுதாரர் திருமதி.மலர்கொடி அவர்கள் Sworn–in affidavit சமர்ப்பித்து மேற்படி Sworn in affidavit ல் திருமதி.மலர்கொடி அவர்கள் மற்ற வாரிசுதாரர்களின் நிலைகுறித்த விபரம் தெரிவிக்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்த ஆவணங்கள் குறித்து சட்டக் கருத்துரை வேண்டி கடிதம் மூலம் திரு.ஐ. பாலன், அரசு தரப்பு வழக்கறிஞர் தூத்துக்குடி அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், சட்டக்கருத்துரையில் திருமதி.மலர்கொடி வழங்கும் sworn in affidavit ல் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி எண் 5(7)(i)(b) ன் படி வாரிசு விபர நிலைகள் கூறப்பட வேண்டும் என்றும், விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்களில் இதர வாரிசுதாரர்களின் விபர நிலைகள் குறிப்பிடவில்லை என்றும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் வழங்கல் விதி எண்.5(7) (i) (b) படியான தகுந்த சங்கதிகள் அடங்கிய sworn in affidavit பெற்று கொண்டு மின் இணைப்பு எண்.342–009–184 ற்கு பெயர் மாற்றம் செய்து கொடுக்கலாம் என்று தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.8 மேற்கண்ட பத்தி 8–ல் உள்ள தீர்வுகளின்படி மின்வழங்கல் விதித்தொகுப்பில் கூறப்பட்டுள்ள விதி 5(7)(i)ன்படி நுகர்வோர் இறந்த காரணத்திற்காகத் தரப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் பிற்சேர்க்கையில் படிவம் (1)இல் கொடுக்கப்பட்டுள்ளவாறு உரிய வட்டாட்சியரிடமிருந்தான வாரிசுச் சான்றிதழ் அல்லது உள்ளாட்சி அமைப்பின் வரிகட்டிய பற்றுச்சீட்டு போன்ற உரிமையை நிலைநாட்டும் சான்று மெய்ப்பு (Proof) மற்றும் சட்டப்படியான வாரிசுகளின் மறுப்பின்மைச் சான்றிதழ் அப்படி யாராவது இருந்தால் அல்லது ரூ.80 மதிப்புடைய நீதித்துறை சாரா (Nonjudicial) முத்திரைத்தாளில் விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (3)–ன்படியான காப்புறுதிப்பத்திரத்துடன் செல்வாக்குள்ள பொது மனித (Notary Public) –ன் அல்லது அரசிதழ் பதிவுற்ற அலுவலரின் அதிகாரச் சான்றின் பேரிலான சூளேற்பு உறுதிமொழிப் பத்திரம் (Affidavit) மற்றும் ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும் சம்மதிப்புப்படிவமும் அளிக்கும் நேர்வில் பெயர் மாற்ற செய்யலாம் என தீர்வுசெய்யப்பட்டுள்ளது.

9.9 மேற்கூறிய விதிகளின்படியே மற்ற வாரிசுதாரர்களின் நிலை குறித்து உறுதிமொழி (Sworn-in affidavit) பத்திரத்தில் தெரிவிக்கும் பட்சத்தில், பெயர் மாற்றம் செய்ய ஏதுவாகும் என மின்குறைதீர் மன்றமும் உத்தரவிட்டுள்ளது. எனவே, மன்றத்தின் உத்தரவு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின் வழங்கல் விதி 5(7)(i)(b)படி ஏற்புடையதாக உள்ளதாக நான் கருதுகிறேன்.

9.10 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் செய்ய கோரும் விண்ணபத்துடன் உரிய வாரிசுதாரர்களின் தற்சமய நிலை பற்றிய விபரங்களுடன் கூடிய சூளேற்பு உறுதிமொழிபத்திரம் (Sworn Affidavit) வழங்கவில்லை என்று தெரிய வருகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் இணைத்துள்ள வாரிசு சான்று 2012 காலகட்டத்தில் உள்ளதாக தெரிய வருகிறது. ஆனால் பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பம் முறையீட்டு செய்த காலகட்டம் 21.12.2022 என தெரியவருகிறது. ஆகவே உரிய வாரிசுதாரர்களின் தற்போதைய நிலையை பற்றிய விபரங்களுடன் சூளேற்பு உறுதிமொழிபத்திரம் இணைக்காத பட்சத்தில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் முழுவதும் பூர்த்தி செய்யாத விண்ணப்பமாகவே கருத முடிகிறது.

9.11 மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான மனஉளைச்சல் ஏற்படுத்திய காரணங்களுக்காக ரூ.10,000/- நஷ்ட ஈடாகவும் மற்றும் கால விரையத்திற்கு உள்ள இழப்பீடையும் வழங்குமாறும் கோரியுள்ளார். இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 7(11)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"(7) குறைமுறையீடு, சட்டத்தின் 57 (1) வது பிரிவின்படி, ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள உரிமதாரர் கடைப்பிடிக்க வேண்டிய செயல்திறன் அளவுகளில் நுகர்வோர் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால், நுகர்வோர் இழப்பீட்டுத் தொகை பெற தகுதியுள்ளவர் என முடிவு செய்யலாம். மேலும், நுகர்வோர் சம்மதித்தால், ஆணையத்தால் இது சம்பந்தமாக வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டுத் தொகையைப் பெற ஒத்துக் கொள்ளலாம் என அறிவிக்கலாம்."*

9.12 மேற்கண்ட விதியை கூர்ந்து பார்க்கும் பொழுது நாம் அறிவது ஒழுங்குமுறை ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள செயல்திறன் அளவுகளில் நுகர்வோரின் சேவைத்திறன் அளவை உரிமதாரர் நிறைவேற்றாமை பற்றியதாக இருந்து, மன்றம் உரிமதாரர் தவறு செய்துள்ளார் என கண்டறிந்தால் நுகர்வோர் இழப்பீட்டு தொகையை பெறுவதற்கு தகுதியானவர் என்று முடிவு செய்யலாம் என்று தெரிகிறது. மேலும், ஆணையம், நிர்ணயித்துள்ள செயல்திறன் அளவுகளை உரிமதாரர் கடைபிடிக்காமல் இருந்தால் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையை தவிர வேறு நஷ்டஈடு வழங்குவதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் வழி இல்லை என்று தெரிகிறது. எனவே. மேல்முறையீட்டாளரின் மனஉளைச்சலுக்கான இழப்பீட்டு கோரிக்கை என்னால் பரிசீலிக்கப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

9.13 ஆனால் சேவை குறைபாடு இருந்தால் இழப்பீடு வழங்கலாம் என்று மேற்கூறிய பத்தியில் தெரியவருகிறது. ஆகவே, மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 2004 –இன் 8 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"8. மின் இணைப்பு பெயர் மாற்றம்*
> *முழுமையான விண்ணப்பத்தைப் பெற்ற ஏழு நாட்களுக்குள் மின்னிணைப்பு (இட) பெயர் மாற்றத்தைச் செய்து முடிக்க வேண்டும்."*

மேற்கண்ட விதியின்படி முழுமையான விண்ணப்பத்தைப் பெற்ற ஏழு நாட்களுக்குள் மின்னிணைப்பு பெயர் மாற்றத்தைச் செய்து முடிக்க வேண்டும் என அறியப்படுகிறது.

9.14 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் 2012 ஆண்டு வழங்கிய வாரிசு சான்றின் அடிப்படையில் பெயர் மாற்றம் கோருகிறார். வாரிசு சான்று வழங்கி பல வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் மின் இணைப்பு எண். 342-009-184 –ன் உரிமையாளரான காலஞ்சென்ற திரு.கொடி சேகர் அவர்களின் உரிய வாரிசுதாரர்களின் தற்போதைய நிலையை பற்றிய விபரங்கள் விதிகளின்படி கோருவது அவசியமாகிறது. ஆனால் மேல்முறையீட்டாளரின் விண்ணபத்துடன் உரிய வாரிசுதாரர்களின் தற்போதைய

நிலையை பற்றிய விபரங்கள் இணைத்து சூளேற்பு உறுதிமொழி பத்திரம் வழங்கப்படாத காரணத்தினால் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பமானது முழுமையான விண்ணப்பமாக கருதப்பட இயலாது. ஆகவே, உரிய காலத்தில் பெயர் மாற்ற விண்ணப்பம் எதிர்மனுதாரரால் பரிசீலிக்கப்படவில்லை என தெரிவித்து அந்த சேவை குறைபாட்டிற்கு இழப்பீடு கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

9.15 கேட்புரையின் போது மேல்முறையீட்டாளர் சூளேற்பு உறுதிமொழி பத்திரம் தன்னால் தற்சமயம் வழங்க இயலும் என்று தெரிவித்துள்ளார். எனவே, எதிர்மனுதாரர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின் வழங்கல் விதி 5(7)–ன்படி தகுந்த ஆவணங்களை பெற்று அதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்ய உத்தரவிடப்படுகிறது.

**10.0 <u>முடிவுரை</u>:**

10.1 மேற்கூறிய பத்திகளின் அடிப்படையில் தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் வழங்கிய தீர்வில் மாற்றம் எதுவும் தேவையில்லை என தீர்வு செய்யப்படுகிறது.

10.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த முறையீட்டு மனு எண் 27/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி K. மலர்கொடி, – By RPAD
39, பக்கிள்புரம், 2வது தெரு,
தூத்துக்குடி – 628 003.
2. செயற்பொறியாளர் /விநியோகம்/நகர்/தூத்துக்குடி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டயபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

3. உதவி செயற்பொறியாளர் /விநி/நகர்/தெற்கு/தூத்துக்குடி,

தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டயபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

4. உதவி மின்பொறியாளர் /விநி/நகர்/தெற்கு/தூத்துக்குடி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
29, மாசிலாமணிபுரம் 3வது தெரு, தூத்துக்குடி – 628 001.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
**தூத்துக்குடி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 131, 132, எட்டபுரம் ரோடு,
தூத்துக்குடி – 628 001.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.